பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 12 திங்கட்கிழமை 25.03.2024 கதிர் 139

# ஆயுதப் போராட்டம் தொடங்கி 40 வருமாகியும் அதற்கான நிலமை மோசமடைந்து இருக்கிறது

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு




ஈழத் தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தைத் தொடக்கி 40 ஆண்டுகள் கடந்து விட்ட போதும், அந்தப் போராட்டம் ஏற்பட்டதற்கான நிலமைகள் இன்னும் மோசமடைந்திருக்கின்றனவேதவிரதீர்வு ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள்தள்ளப்பட்டுக்கொண்டிருந்தபோது அதிலிருந்து காப்பாற்றக்கூடிய ஆபத்தாந்தவனாக பஸில் ராஜபக்சஉருவகிக்கப்பட்டார். அவரால் மட்டுமே பொருளாதாரச் சரிவைத் தூக்கி நிறுத்த முடியும் என்று கட்டுக்கதைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. கடைசியில் தேசியப்பட்டியல் மூலம் அவரை நாடாளுமன்ற உறுப்பினராக்கி அவரிடம் நிதி அமைச்சும் கையளிக்கப்பட்டது. ஆனால் அவரால் செய்ய முடிந்தது ஒன்றும் இருக்கவில்லை.

இப்போதும் மொட்டுக் கட்சியின் அரசியல் சரிவிலிருந்து அதனை மீட்டெடுக்க அமெரிக்காவிலிருந்து பஸில் நாடு திரும்புகின்றார் என்கிற விம்பங்கள் ஏற்படுத்தப்பட்டன. பஸிலும் பெரும் ஆரவாரங் ☞ 2

## இன்று நள்ளிரவு முதல் பால் மா விலை குறைப்பு

இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும்வகையில்இறக்குமதிசெய்யப்படும் பால்மாவின் விலையை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்படி இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலையை 150 ரூபாவினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் 400 கிராம் பால்மாவின் விலையை 60 ரூபாவினால் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

# ரணிலின் பிறந்தநாளை முன்னிட்டு இலவச காப்புறுதி வழங்கும் திட்டம்





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 75 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு வவுனியாவில் நேற்று விசேடபூஜைவழிபாடுகள் இடம்பெற்றதுடன், கட்சி அங்கத்தவர்களுக்கு இலவசகாப்புறுதித்திட்டம் வழங்கும் நிகழ்வும் இட்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின்வன்னித்தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன் தலையில் வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் 75 ஆவது பிறந்தநாளை அவருக்கு ஆசி வேண்டியும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும்விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

கந்தசாமி ஆலய பிரதமகுருதலைமையில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து ஐக்கியதேசியக்கட்சியின் வவுனியா அலுவலகத்தில்கட்சியின்உறுப்பினர்களுக்கு இலவச காப்புறுதிவழங்கும்திட்டம் ஆரம்பித்துவைக்கப் ☞ 8

# நெருக்கடிக்கு உதவுவது போல வந்த இந்தியா எரிகிற வீட்டில் பிடுங்குகிறது

## விமல் வீரவன்ஸ சாடல்

இலங்கைக்குநெருக்கடியான நேரத்தில் உதவுவதுபோன்றுவந்த இந்தியா, எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் என்பதைப் போன்று நடந்துகொள்கிறது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மஹரகவில் இடம் பெற்ற மேலவை இலங்கைகூட்டணியின் மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சாகல ரத்நாயக்க இந்தியாவுக்கு செல்லவுள்ளார். அவர் இந்தியாவுடன் இலங்கைக்கும் அந்நாட்டுக்கும்இடையில் தரைவழிப் பாதையை அமைப்பது தொடர்பில் பேச்சு நடத்தவுள்ளார்.

முதலாவதாகஇந்தியாவுக்கும் இலங்கைக்கும் தரைவழிப் பாதை அமைப்பது தொடர்பில் பேச்சுக்களை நடத்துவதற்கான அங்கீகாரத்தினை சாகல ரத்நாயக்கவுக்கு யார் வழங்கியது என்ற கேள்வி உள்ளது.

அதே போன்று இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ☞ 2

### உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு குறித்து

# மைத்திரியிடமிருந்து இன்று வாக்குமூலம் பெறப்படும்

## பொலிஸ மா அதிபர் தகவல்

உயிர்த் ஞாயிறுதாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் வாக்குமூலம் பெறவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்

இன்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் இது தொடர்பான வாக்குமூலத்தை பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தாம் தெரிவித்த கருத்து குறித்து வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக் களத்தில் முன்னிலையாகவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர்பிரதிப்பொலிஸ் மாஅதிபர்நிஹால்தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் சீனாவுக்கு சாகல இந்தியாவுக்கு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க இந்தியாவுக்கும், பிரதமர் தினேஷ் குணவர்த்தன சீனாவுக்கும் இந்த வாரம் ஆகிய நாடுகளுக்குப் பயணிக்கவுள்ளனர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன் இன்று முதல் சீனாவுக்கான விஜயத்தினை ஆரம்பிக்கவுள்ளதோடு, அவருடன் நிதிஇராஜாங்கஅமைச்சர் செஹான் சேமசிங்க, பிரதமரின் செயலாளர் அநுரதிஸாயக்கஉள்ளிட்டவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் குழுவினர் சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் மற்றும் அந்நாட்டுப் பிரதமர் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினரைச்சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை, இந்தியாவுக்கும், ☞ 2

# மறுசீரமைப்பு ஊடாக மட்டுமே பொருளாதார மீட்சி சாத்தியம்

## ரணில் சுட்டிக்காட்டு

புதிய மறுசீரமைப்புக்களின் ஊடாக மாத்திரமே பொருளாதாரமறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்றும், கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைப் போல எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதை உறுதிசெய்யும் வகையில் ஆளும் தரப்பின் வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக் காட்டினார்.

ஏனைய அரசியல்வாதிகள் பொறுப்பேற்கத் தயங்கிய நாட்டையே தான் பொறுப்பேற்றார் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சிலர் தமது அரசியல் எதிர்காலம் பற்றி மட்டுமே சிந்தித்த போதும், தான் நாட்டின் எதிர்காலத்தை பற்றியே சிந்தித்தார் எனவும் ☞ 2

# மைத்திரிபால விரைவில் சிறைக்குள் தள்ளப்படுவார்

## உதயன கம்பன்பில எதிர்வுகூறல்

பயங்கரவாதம், அரசுக்கு எதிரான செயற்பாடுகள்தொடர்பில் தகவல் தெரிந்தும் அதை மறைப்பது 10 வருடகால சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவெகுவிரைவில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு செல்வார் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலதெரிவித்தார்.

மஹரகவில் இடம் பெற்ற மேலவை இலங்கைகூட்டணியின் மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும் எதிர்பார்ப்புகளுக்குமத்தியில்நாட்டு மக்கள்ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். மாற்றம்வேண்டும்என்று குறிப்பிட்டுக் கொண்டு 2015 ஆம்ஆண்டுநாட்டு மக்கள் மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆளும் தரப்பைத் தோற்றுவித்தார்கள். நல்லாட்சி அதிகாரத்திற்கு வந்ததும் குறுகிய காலத்துக்குள் மத்திய வங்கியைமோசடிசெய்து, பொருளாதார பாதிப்புக்கு வித்திட்டது.

நல்லாட்சியின் அரச தலைவர்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியால் ☞ 8

### தமிழ் மக்கள் போதும் எனக் கருதினால்

# குறைகளை நீக்கி மாகாண சபை முறையை செயற்படுத்த தாம் தயார் என்கிறது ஜே.வி.பி.

## அதன் தலைவர் அனுரகுமார கனடாவில் தெரிவிப்பு

தமிழ் மக்கள் போதும் என்று நினைத்தால் மாகாண சபை முறைமையை செயற்படுத்த நாம் தயார் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கனடாவின்ரொரண்டோவில் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில்கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதே பல அரசியல்வாதிகளின் நோக்கமாகும். ஆனால் அனைத்து மக்களினது ஒத்துழைப்புடன் அதிகாரத்தினைப் ☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

களுடன் கொழும்பு திரும்பினார். வந்தவுடனேயே சில அரசியல் நகர்வுகளையும் தொடக்கினார். ஆனால், அவையெல்லாம் பிசுபிசுத்துப் போய்விட்டன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்காக பஸில் காய் நகர்த்தினார். ஆனால் அது முற்றிலுமாகப் பிசுபிசுத்துவிட்டது.

கடந்த வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் உள்ள கட்சி அலுவலகத்தில் பஸில் ஓர் இரகசிய நடவடிக்கையில் இறங்கினார். தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைச் சந்திக்க நேரிடும் என்பதால், கட்சியின் நற்பெயரையும், ராஜபக்ச குடும்பத்தின் பாரம்பரியத்தையும் காப்பாற்ற பொதுத் தேர்தலில் வெற்றியைப் பெறுவது முக்கியமானது என்று அவர் நம்பியே அவர் காய் நகர்த்தினார்.

இந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, நாடாளுமன்றத்தை கலைக்கும் பிரேரணைக்கு ஆதரவளிப்பீர்களா என்று விசாரிப்பதற்காக பஸில் கடந்த வாரம் சமகி ஜன பலவேகய மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றுக்குச் செய்தி அனுப்பி நோட்டம் பார்த்தார். எவ்வாறாயினும், இந்தச் செய்தியைப் பெற்ற சஜித், மொட்டுவுடன் ஒத்துழைக்க முடியாது என்று சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்படுத்தினார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயார் என மொட்டுவின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் சஜித். ஜே.வி.பியும் கூட பஸிலின் யோசனைக்கு, அதாவது பொதுத் தேர்தலுக்குச் செல்வதற்குத் தயக்கம் வெளியிட்டுள்ளது தயக்கத்தை வெளிப்படுத்தியது, அத்தகைய தீர்மானத்தில் கையெழுத்திட விரும்பவில்லை என்று அறிவித்தது.

இதையடுத்து பஸில் அடுத்த நடவடிக்கையை ஆரம்பித்தார். ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமான பொஹொட்டுவையில் உள்ள இரண்டு மூன்று பேரைத் தவிர மற்ற அமைச்சர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டார். இவ்வருட இறுதிக்குள் பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டும் என அந்த அழைப்புகள் மூலம் பஸில் அவர்களுக்கு சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தல் ஒக்டோபர் மாதம் நடத்தப்படவேண்டும். அதை எந்த வகையிலும் தள்ளிப் போட முடியாது. அந்த ஜனாதிபதி தேர்தலில் இருந்து யார் ஜனாதிபதியாக வந்தாலும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்படும். அவ்வாறு தேர்தல் நடந்தால் மொட்டுவில் உள்ள பலர் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வர முடியாது. எனவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும். அப்படி நடந்தால் தற்போது நாடாளுமன்றத்தில் உள்ள பலர் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வரலாம். எனவே அனைவரும் ஒன்றிணைந்து முதலில் பொதுத் தேர்தலுக்கு செல்வோம். இப்போதே மாவட்டத்திற்குச் சென்று ஒழுங்கமைக்கும் செயற்பாடுகளை ஆரம்பியுங்கள்.' ஜனாதிபதிக்கும் ஐ.தே.கவுக்கும் நாட்டில் மக்கள் அடித்தளம் இல்லை என பஸில் அவர்கள் அனைவருக்கும் மறைமுகமாகத் தெரிவித்தார்.

இவ்வாறு கட்சியின் அனைத்து உறுப்பினர்களுடனும் தனிப்பட்ட முறையில் பேசிய பசில், வார இறுதியில் உள்ளூராட்சி உறுப்பினர்களைச் சந்திக்கவும் நடவடிக்கை எடுத்தார். அதன் பின்னர், திங்கட்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சந்திக்க நடவடிக்கை எடுத்தார். சிறிது நேரத்தின் பின்னர் மொட்டுவின் அமைச்சர்கள் அனைவரும் அக்கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். இந்த நேரத்தில் முதலில் பொதுத் தேர்தலுக்கு செல்வது கட்சிக்கு சாதகமாக அமையும் என அங்கும் பசில் குழுவினரிடம் சுட்டிக்காட்டினார்.

இவ்வளவு முயற்சிகள் எடுத்தும் பஸிலின் பருப்பு ரணிலிடம் வேகவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ரணில் இதுவரை பச்சைக்கொடி காட்டவில்லை.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ஆயுதப் போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை. ஐக்கியப்பட்டு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலமே தமிழ் தேசிய இனப் பிரச்சனை இன்னமும் இருக்கின்றது என்பதை மீள சொல்ல முடியும் என்று ஈபிஆர்எல்எவ் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் பல்வேறுபட்ட தடைகளைத் தாண்டி வந்திருக்கின்றோம். எங்களுடைய ஆயுதப் போராட்டம் தொடங்கி 40 வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில், என்ன காரணத்திற்காக ஆயுதப் போராட்டம் தொடங்கியதோ அந்த நிலைமை இன்று இன்னும் மோசமடைந்திருக்கிறது. இலங்கையில் இதுவரை வந்த ஆட்சியாளர்கள் ஈழத்தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பவர்களாக இல்லை.

ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு எட்டப்பட்டது என்றால் அது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் ஒன்று தான். 13 ஆவது திருத்தத்தில் உள்ள மாகாணசபையைக்கூட தருவதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் தயாரில்லை. கடந்த

6, 7 வருடங்களாக அதற்கு தேர்தலும் நடத்தப்படாத நிலையே உள்ளது. மாகாணங்களுக்குரிய அதிகாரங்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதேநேரம், இந்தவருடம் தேர்தலை எதிர்நோக்கும் ஒரு வருடமாகவும் இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் நடந்தே ஆக வேண்டும் என்ற நிலை இருக்கின்றது. முதலில் நாடாளுமன்ற தேர்தலை நடத்தவேண்டும் என்றும் ஒரு சில கருத்துக்கள் உருவாகி வருகின்றன. நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கா சூழ்நிலைகள் இருகின்றதா? இன்று பலமான பொது ஜன பெரமுன கட்சியில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை எதிர் கொள்ளத் தயாரா? 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைக் கலைப்பதை ஏற்பார்களா? என்றால் அதற்கான சூழ்நிலைகள் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பதும் இங்கு இருக்கக் கூடிய கேள்வியாகவுள்ளது. ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டனியில் அங்கத்துவம் வகிக்கும் 5 கட்சிகள் கடந்த சில மாதங்களாக இவை தொடர்பான பல்வேறு பட்ட கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்டிருக்கின்றன. இதனை எவ்வாறு கையாளலாம், தமிழ் மக்களின் விடியலுக்காக இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களுக்குச் சாதகமாக பயன்படுத்தலாம் என்பன தொடர்பில் பேசி வருகின்றோம். அனைத்து தமிழ் கட்சிகளும் முயற்சித்தால் அதனை சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பது பொதுவான கருத்து.

தமிழ் தேசிய பரப்பில் இருக்கக் கூடிய தமிழ் கட்சிகள் ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயற்படுவார்களாக இருந்தால் தமிழ் மக்களது கோரிக்கைகளை குறைந்த பட்சம் வெளிக்கொண்டுவர முடியும். தற்போது இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினைதான் இருப்பதாகப் பேசப்படுகிறது தேசிய இனப்பிரச்சனை ஒன்று இருப்பதாக தற்போது யாரும் பேசுவது கிடையாது. பொருளாதார பிரச்சினை தீர்க்கப்பட்டால் அனைத்துப் பிரச்சனைகளும் தீர்ந்து விடும் என்ற கருத்தில் பேசுகிறார்கள். ஆனால் பொருளாதாரப் பிரச்சனைக்கு போரும், தேசிய இனப்பிரச்சனையும் தான் காரணம் என்பதை மறந்து போயுள்ளார்கள்.

இலங்கையில் நடந்த போருக்காகத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு ஏறத்தாழ 250 மில்லியன் அமெரிக்கா டொலர் பணத்தை இலங்கை செலவு செய்துள்ளது எனச் சொல்லப்படுகிறது. அந்தப் போரால் ஏற்பட்ட அழிவு அதைவிட இன்னும் பல மடங்கு அதிகமானது. பொருளாதார சீரழிவுக்கு தேசிய இனப் பிரச்சனையும், அதனை கட்டுப்படுத்த அட்சியாளர்கள் போரைத் தெரிவு செய்ததும் தான் காரணம். அதுதான் மூல காரணம். அதற்குத்தான் தீர்வு காணவேண்டும். அதை விடுத்து பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு என்பது இதற்கான நிரந்தர தீர்வு இல்லை.

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை இருந்தால்தான் முதலீடுகளை வெளிநாடுகளோ, தனிநபர்களோ மேற்கொள்வார்கள். இந்த நாட்டில் தொடர்ந்தும் வெடுக்குநாறிப் பிரச்சினைகளும், குருந்தூர் மலை பிரச்சனைகளும், புதிது புதிதாக புத்த கோவில் பிரச்சினைகளும், வடக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் பிரச்சினைகளும் தொடந்தும் நடக்குமாக இருந்தால் இந்த நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை தொடர்ந்தும் இருக்காது.

ரணில் விக்கரமசிங்க பொருளாதார ரீதியாக நாட்டை மேம்பட்ட நிலைக்கு கொண்டுவந்திருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் நிச்சயமாக இல்லை. பொருளாதார ரீதியாக இலங்கை பெற்ற கடன்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. கடன்கள் இன்னும் பல வருடங்களுக்கு பின் தள்ளப்பட்டுள்ளது. தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதில் ஆட்சியாளர்களுக்கு அக்கறை இல்லை. தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறார்கள். குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை கூட நடைமுறைப்படுத்த முடியாது என்கிறார்கள்.

நாங்கள் இந்த தேர்தலில் சிங்கள தலைவர்களுக்கும், சிங்கள மக்களுக்கும் சொல்லவேண்டிய ஒரு செய்தி இருக்கிறது. இலங்கையில் இன்னும் தேசிய இனைப்பிரச்சனை தீர்க்கப்படவில்லை என்பதை மீளவும் சொல்ல வேண்டியுள்ளது. அதை எவ்வாறு சொல்ல வேண்டி உள்ளது என்றால் நாங்கள் இந்த தேர்தலில் ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்துவதன் மூலமும், அந்த வேட்பாளருக்கு பல லட்சம் வாக்குகளை பெற்றுக் கொடுப்பதன் ஊடாகவும் அந்த செய்தியை வழங்க முடியும். உங்கள் மேல் நாங்கள் நம்பிக்கை இழந்துள்ளோம். நீங்கள் இனப்பிரச்சனை தீர்வை கொள்ளவேயில்லை என்ற செய்தியை சிங்கள தலைவர்களுக்கும், மக்களுக்கும் இதன் மூலம் சொல்ல முடியும். இராஜ தந்திரிகளும் அதனைப் புரிந்துகொள்வர். அதனை ஒருவர் நினைத்தால் மாத்திரம் செய்ய முடியாது.

இந்த போராட்டம் தமிழ் மக்களது இருப்புக்கான போராட்டமாக உள்ளது. நாங்கள் ஐக்கியப்பட்டு தேர்தல் விடயத்தை கையாளுவோமாக இருந்தால் எங்கள் இருப்பை காப்பாற்ற முடியும். நாங்கள் திடகாந்திரமாக செயற்படுவோமாக இருந்தால் சிங்கள தரப்பை சிந்திக்க வைக்க முடியும் எனவும் தெரிவித்தார். 100

## நெருக்கடிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் எரிபொருள், மின்சாரத் தொடர்புகளும் ஏற்படுத்தப்படவுள்ளது. இதன்பின்னர் நிலைமைகள் என்னவாகப் போகின்றன, இலங்கையின் சுயாதீனமும் இறைமையும் எங்கே போகப்போகின்றன என்பது தொடர்பில் சிந்திப்பதில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில் தன்னுடைய நலன்களையே பூர்த்தி செய்வதற்கே முயற்சிக்கின்றது.

இந்த இடத்தில் உதாரணமொன்றைக் கூறுகின்றேன். இந்தியாவின் சிக்கிம் மாநிலம் முபு தனி நாடாக இருந்தது. அங்கு ஜனாதிபதி ஒருவர் கூட இருந்தார். அதன் பின்னர் இந்தியா அந்த நாட்டுடன் உறவுகளை மேம்படுத்தியது. சொற்பகாலத்தில் குறித்த ஜனாதிபதி தேர்தலில் தோற்றார். எனினும் அந்த ஜனாதிபதியை வெற்றிபெறச் செய்வதற்காக இந்தியா மீண்டும் தலையீடுகளைச் செய்து தேர்தலை நடத்தியது, தோல்வி உற்றவர் வெற்றி பெற்றார். அவருடன் அனைத்து உடன்பாடுகளையும் செய்தது. எரிபொருள், மின்சாரம் என்ற ஒப்பந்தங்கள் அவற்றில் பிரதானமானவை.

பின்னாட்களில் சிக்கிம் சீனாவுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் சில நகர்வுகளை முன்னெடுத்தது. அப்போது இந்தியா, எரிபொருளை நிறுத்தியது. மின்சாரத்தினை நிறுத்தியது. குறித்த நகர்வு தடைப்பட்டது. அதுமட்டுமன்றி சிக்கிம் இந்தியாவின் 22 ஆவது மாநிலமாகவும் மாறியது.

இந்த வரலாற்று விடயத்தினை நினைவில் கொள்ள வேண்டும். இருநாடுகளுக்கு இடையிலான தொடர்புகள் என்ற அடிப்படையில் நாட்டின் சுயாதீனத்தினை அழித்துவிடக்கூடாது.

ஏப்ரலில் எட்கா ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது. இதன்மூலம் இந்தியா பெருமளவில் தன்னை இலங்கையில் விரிவுபடுத்தவுள்ளது. வளங்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளது.

ஆகவே, இந்தியாவைப் பொறுத்தவரையில் நெருக்கடியான நேரத்தில் உதவுவது போன்று வருகை தந்து எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம் போன்றே செயற்படவுள்ளது. ஈற்றில் அனைத்து வளங்களையும் விற்பனை செய்து விட்டு ஆட்சியாளர்கள் கைகட்டி நிற்கப்போகின்றார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு வளங்களை விற்பனை செய்து ஆட்சியை கைப்பற்றிக்கொண்டால் கூட பிரச்சினை இல்லை ஆனால் நாம் அதற்கு அனுமதிக்க முடியாது என்றார்.

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கும் தரைவழித் தொடர்பினை ஏற்படுத்துவது தொடர்பில் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மார்ச் 27 புதுடில்லிக்குப் பயணம் செய்யவுள்ளார்.

இவர் இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருக்கவுள்ளதோடு தரைவழிப் பாலம் அமைப்பது சம்பந்தமான பேச்சுக்களில் பங்கேற்கவுள்ளதோடு உயர்மட்டத்தரப்பினரையும் சந்திக்கவுள்ளார்.

## மறுசீரமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டினார்.

பொலன்னறுவையில் சனிக்கிழமை நடைபெற்ற 'யுனைட்டட் யூத் இளைஞர் ஒன்றியம்' உடனான சிநேகபூர்வ கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

'ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்' என்ற இச்சந்திப்பில் நாட்டின் எதிர்காலம் மற்றும் தூரநோக்குக் குறித்து இளைஞர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, இளையோரின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஆளும் தரப்பு மேற்கொண்டு வரும் புதிய பொருளாதார சீர்திருத்தங்களின் பிரதிபலன்கள் இன்னும் சில வருடங்களில் மக்களுக்கு கிடைக்கும் என்றார் எனவே, தங்களினதும் நாட்டினதும் எதிர்காலத்திற்கான சிறந்த வழி எதுவென்பதை நாட்டின் இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇ

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் தனியொரு ஆசனம் மட்டுமே இருந்தது. எனக்கு இருந்த ஒரே பிரச்சினை அதுவாகவே இருந்தது. அதற்கு முன்னதாக நான் டிசெம்பர் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடியிருந்தேன். உலக வங்கியுடனும் கலந்தாலோசித்தேன்.

அதுபற்றி முன்னாள் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறினேன். அத்துடன் கடந்த தேர்தல் சமயத்தில் நாட்டில் பணமில்லை என்பதை ஐ.தே.க அறிவித்தது. குறைந்தபட்சம் 3000 மில்லியன் டொலர்களையாவது கையிருப்பில் வைத்திருக்க வேண்டியது அவசியமென கூறியது. அப்போது மக்கள் எமக்கு வாக்களிக்க வில்லை. ஆனால் 2021 ஆம் ஆண்டில் நாம் கூறியவை உண்மையாக நிகழ்ந்தன.

அத்தகைய நிலையில் நான் நாட்டைக் பொறுப்பேற்றேன். நான் நாட்டைக் பொறுப்பேற்றுக்காவிட்டால் என்ன நடந்திருக்கும்? நாட்டின் பொருளாதாரம் முழுமையாக முடங்கிப் போயிருக்கும். சரிவடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடினோம். தற்போது சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு வெற்றியடைந்துள்ள நிலையில், எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம்.

இந்தக் கலந்துரையாடல்களின் பின்னர் எமது நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அந்த நாடுகளின் உதவிகள் கிட்டும். அதனால் எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிடாது. நாம் இன்னும் இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தையே கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு வருடத்திலும் ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகமாக காணப்படுகிறது. அந்த இடைவெளியை சரிசெய்ய மீண்டும் கடன்களைப் பெறுகிறோம். இந்நிலை தொடர்ந்தால் இன்னும் 10 வருடங்களில் மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிவிடுவோம்.

நீங்கள் 27 வயது இளைஞராக இருந்தால் உங்களுக்கு 37 வயதாகும் போது மீண்டும் இதே போன்ற பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நீங்கள் தயாரா என்று கேட்க விரும்புகிறேன். எரிபொருள் கொள்வனவு செய்ய பணம் இல்லாதஇ பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாட்டை ஏற்க அன்று யாராவது இருந்தார்களா? இந்த பொருளாதார நெருக்கடியை அடுத்த தலைமுறைக்கும் கொண்டுச் செல்லாமல் இருப்பது அனைவரினதும் பொறுப்பாகும். அதற்காக அர்பணிக்க வேண்டும். விரைவில் நாம் பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வேண்டும்.

அதற்கு நகரங்களில் மாத்திரமின்றி கிராமங்களினதும் பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும். வரவு செலவு திட்டத்தை சரியாக வரையறுக்க வேண்டும். அரசாங்கத்தின் திட்டங்கள் சரியாக செயற்படுத்தப்பட்டால் 2035 ஆம் ஆண்டுக்குள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நகர முடியும். அதன் பின்னர் துரித பொருளாதார அபிவிருத்தியை எட்ட முடியும்.

அத்துடன் வருடாந்தம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 25 - 50 இலட்சம் வரையில் அதிகரிக்க வேண்டும். மேலும்இ அதிக பணம் செலவிடும் சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வர வேண்டும்.

மேலும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் கிராமங்களைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதனூடாக விவசாய ஏற்றுமதி இலக்குகளை விரைவில் அடையலாம். இதன் போது புதிய பயிர்களை விளைவிப்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தியிருப்பதோடு, தூரியன் உற்பத்தி குறித்து தாய்லாந்து அரசாங்கத்துடன் கலந்துரையாடியுள்ளோம். மேலும்இ இந்நாட்டில் பயிர் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியும்.

சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்திற்கான சாத்தியக்கூறுகள் நாட்டில் அதிகமாக உள்ளன. அதனால் காற்றாலை மற்றும் அனல் மின்சாரத்திற்கான வலுசக்தி உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்தி, தேவைக்கு அதிகமான மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்ய முடியும். அத்துடன் இந்தியாவின் உதவியுடன் திருகோணமலையில் முதலீட்டு வலயத்தை உருவாக்க ஆயிரம் ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன்இ மகாவலி ஏ- பீ வலயங்களை

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# உலக வாய் சுகாதார தினத்தையொட்டி கண்ணகிபுரத்தில் பற்சிகிச்சை முகாம்





(நூருல் ஹுதா உமர்)

உலக வாய் சுகாதார தினத்தையொட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த பற்சிகிச்சை முகாம் அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் கண்ணகி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

'மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல்' எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வீ.பபாகரன், கல்முனை பிராந்திய தாய்சேய் நலன்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பீ.அகிலன், பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சஷ்ரூக், கண்ணகி மகா வித்தியாலய அதிபர் ரீ.ராசநாதன் மற்றும் பல் மருத்துவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றது. பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.சஷ்ரூக், டொக்டர் ஹபீல் ஆகியோர் இக்கருத்தரங்கில் விரிவுரையாற்றினர். ஒவ்வொரு வருடமும் மார்ச் 20 ஆம் திகதி உலக வாய் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனையொட்டி கல்முனை பிராந்திய வாய் சுகாதார பிரிவு மருத்துவ முகாம், விழிப்புணர்வுக் கருத்தரங்கு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.

ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரியின் பூரண ஒத்துழைப்புடன் குறித்த பற்சிகிச்சை முகாம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கட்டுநாயகவிலிருந்து ஜப்பான் செல்ல முயன்ற ஈரானியர் கைது

போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி ஜப்பான் நாட்டிற்கு செல்ல முயன்ற 41 வயதுடைய ஈரானியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். வெள்ளிக்கிழமை இரவு கட்டாரிலிருந்து வருகை தந்த ஈரானியர் ஜப்பான் நாட்டிற்கு புறப்படும் விமானத்தில் ஏறுவதற்காக அவரது ஆவணங்களை கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளார்.

அவருடைய ஆவணங்கள் சந்தேகத்தை ஏற்படுத்தியதால் குடிவரவு, குடியகழ்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க ஶ்ரீலங்கன் விமான சேவை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன் , அவரது பயணப்பொதிகளை சோதனையிட்ட போது போலியான கடவுச்சீட்டுகளும் போலி முத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பின்னர், இந்த ஈரானிய பிரஜையை கைது செய்த குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், அவரை நாடு கடத்துவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த கட்டார் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (05)

# வீதி விபத்துக்களில் ஐவர் பரிதாபச் சாவு

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துக்களில் ஐவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மொரந்துடுவ களுத்துறை - பண்டாரகம பிரதேசத்தில் பண்டாரகமயிலிருந்து மொரந்துடுவ நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் பண்டாரகமை பிரதேசத்தை சேர்ந்த 19 வயது இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், திஸ்ஸமஹாராம - கிரிந்த வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்த சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில், காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் திஸ்ஸமஹாராம பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவராவார்.

மேலும், புத்தளம் - குருணாகல் வீதியில் கல்குளம பிரதேசத்தில் குருணாகலில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த லொறி ஒன்று எதிர் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த லொறி வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த லொறியின் சாரதி மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் குழந்தையும் புத்தளம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் தாய் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் ஆனமடு பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடைய பெண்ணாவார்.

இதேவேளை, வெள்ளிக்கிழமை இரவு பேலியகொடை - புத்தளம் வீதியில் சிலாபத்திலிருந்து மாரவில நோக்கி பயணித்த கார் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளானதில், காயமடைந்த பாதசாரி சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாதம்பே பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடையவராவார்.

அதுருகிரிய - பனாகொட வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹோமாகம பிரதேசத்தை சேர்ந்த 53 வயதுடையவராவார். (05)

# கொக்கேய்ன் போதை மாத்திரைகளுடன் வெளிநாட்டவர் கட்டுநாயக்காவில் கைது




நாட்டிற்கு சட்டவிரோதமாக 12 கொக்கேய்ன் போதை மாத்திரைகளை கொண்டுவந்த வெனிசுவெலா பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

41 வயதுடைய இவர் பிரேஸிலிலிருந்து டுபாய் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ள நிலையில் இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 132 கிராம் நிறையுடைய 12 கொக்கேய்ன் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில், கைப்பற்றப்பட்ட கொக்கேய்ன் போதை மாத்திரைகள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (05)

# கிளிநொச்சியில் திடீரென தேங்காய்க்கு தட்டுப்பாடு





கிளிநொச்சி மாவட்டத்தின் வென்ஈ தாக்கம் காரணமாக தேங்காய்க்கு பெரிதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தேங்காய் கொள்வனவாளார்கள் மற்றும் தென்னை பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வென் ஈ தாக்கம் காரணமாக பலரது தென்னை தோட்டங்கள் வென் ஈ தாக்கத்தின் காரணமாக தென்னை மரங்களில் வெறுமனே மரங்களாக காணப்படுவதாகவும் வென்ஈ தாக்கப்பட்ட மரங்களில் சிறு குறும்பைகூட இல்லாத நிலையிலும் வெறுமனே நோய் தாக்கம் ஏற்படுத்தப்பட்ட மரமாக காணப்படுவதும் இதன் காரணமாக தற்பொழுது கிளிநொச்சி சேவை சந்தையில் ஒரு தேங்காயின் விலை 120 ஷரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வேர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தென்னை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கையில் -

ஒவ்வொரு மாதமும் அறுவடை செய்கின்ற தேங்காயை விட நாளில் ஒரு பங்கு மாத்திரமே தற்பொழுது அறுவடை செய்யப்பட்டு வருவதாகவும் இனி வரும் மாதங்களில் முற்றாக தேங்காய் இல்லாத நிலை காணப்படும் எனவும் இதன் காரணமாக முட்டைக்கு ஏற்பட்ட நிலையே தேங்காய்க்கும் ஏற்படும் நிலை காணப்படுவதாகவும் இனிவரும் மாதங்களில் தேங்காய் ஒன்று 200, 300 ரூபாவுக்கு விற்பனை செய்யும் நிலை ஏற்படக்கூடும் என தென்னை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் தென்னை பயிர்செய்கையாளர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர். (05-113)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அலட்சியம் தகுமா?

அண்மையில் உலக தண்ணீர் தினம் (பங்குனி 22) கொண்டாடப்பட்டது. தமிழர் பகுதிகளிலும் இது தொடர்பான விழிப்புணர்வுக்கான சில பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இந்த நாளில், தண்ணீரின் முக்கியத்துவம் பற்றியும், தண்ணீரின் சேமிப்பு, நீர் மேலாண்மை, நீர் பாதுகாப்பை வலியுறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மக்களுக்கு நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வூட்டும் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

2030க்குள், அனைவருக்கும் பாதுகாப்பான தண்ணீர் மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்வதை இலக்காகக் கொண்ட 'ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்கு 6'–ஐ நோக்கியே, இந்த சர்வதேச தண்ணீர் தினம் அனுசரிக்கப்படுகிறது.

1992–ஆம் ஆண்டு, ரியோ–டி–ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின்போது தான் முதல்முதலில், சர்வதேச தண்ணீர் தினம் பற்றிய யோசனை பரிந்துரைக்கப்பட்டது. அதை தொடர்ந்து, அடுத்த ஆண்டு முதலே, பங்குனி 22 உலக தண்ணீர் தினமென கொண்டாடப்பட்டு வருகின்றது.

பூமியின் மொத்த நீரின் கொள்ளளவு 1360000000 கனகிலோமீட்டர் ஆகவும், உறைபனி ஆறு, பனிப்படலங்கள் ஆகியவற்றில் 25000000 கனகிலோமீட்டர் ஆகவும், நிலத்தடி நீரில் 13000000 கனகிலோமீட்டர் ஆகவும், ஏரி, கடல் ஆகியவற்றில் 250000 கனகிலோமீட்டர் கொள்ளளவுமாக காணப்படுகின்றது. இதில் மனிதனால் குடிதண்ணீராகப் பயன்படுத்த முடிந்த தண்ணீரின் அளவு மிகக் குறைவானதே.

உலகில் மனிதனுக்கு பயன்படும் நீரானது இன்று பாரிய பிரச்சனைக்கு பின்தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக மனிதருக்கு போதுமான அளவு நீரானது ஆரம்ப காலத்தில் கிடைக்கப்பெற்ற போதும் அது இன்று தட்டுப்பாடுக்குரிய நிலையாக மாறியுள்ளது. குறிப்பாக மனிதன் ஒரு நாளுக்கு 2000 – –5000 லீற்றர் தண்ணீரை உபயோகின்றான். ஆனால் இன்று அந்த அளவு நீர் ஒவ்வொருவருக்கும் கிடைப்பதில்லை, மட்டுமல்ல தரம் குன்றிய நீரும் கிடைக்கின்றது. இதன் காரணமாக நீர் நெருக்கடி பூதாகாரமாக எழுகின்றது.

இதற்காக நாம் உலகம் முழுவதும் சுற்றத் தேவையில்லை, தற்போதே வாட்டி வதைக்கத் தொடங்கிவிட்ட கடும் வெப்பத்தால் இலங்கையின் பல பகுதிகளிலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கில் நிலமை மோசமானது. அடுத்து வரும் மாதங்களில் அது இன்னும் மோசமடையும். வறட்சியால் மனிதர்களும் விலங்குகளும் குடிதண்ணீருக்கே அல்லாடும் நிலை வரும். பல இடங்களுக்கும் குடிதண்ணீரை வாகனங்கள் மூலமே விநியோகிக்க வேண்டிவரும்.

அப்படிப்பட்ட நிலையிலும் உலக நீர்த் தினத்தில் நாம் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் மழை நீரைச் சேகரிக்கவும் மழையின்போது வீணாகக் கடலில் சென்று கலக்கும் தண்ணீரை எமது பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளவும் என்ன வழிகளை இந்த நீர்த் தினத்தில் உருவாக்கினோம், திட்டமிட்டோம் என்றால் எதுவுமில்லை என்பதே பதில். தண்ணீரின் தேவையை அதிகம் கொண்டிருக்கும் நாம் இப்படி அலட்சியமாக இருக்கலாமா?



# பட்டினியையும் ஆயுதமாக்கும் இஸ்ரேல்
# பசியால் கொல்லப்படும் பாலஸ்தீனர்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கொடும் போரால் பாதிக்கப்பட்டு, பஞ்சத்தின் விளிம்பில் இருக்கும் காசா நகருக்கு உணவுப் பொருட்கள் மற்றும் குடிதண்ணீர், மருந்துப் பொருட்கள் ஆகியவை சைப்ரஸ் நாட்டின் துறைமுகத்திலிருந்து கடல் வழியாகத் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.





**இஸ்ரேலின் கடல்வழி முற்றுகை:**

காசாவில் கடந்த ஒக்டோபர் ஏழாம் திகதி போர் வெடித்தது தொடக்கம் அந்தப் பகுதியை வெளியுலகில் இருந்து இஸ்ரேல் முடக்கி இருக்கும் நிலையிலேயே அங்கு நேரடி உதவி விநியோகத்திற்கு தொண்டு நிறுவனங்கள் முயன்றுள்ளன.

இஸ்ரேல் ராணுவத்தினரின் தொடர் தாக்குதலால் நிலைகுலைந்து போயுள்ள பாலஸ்தீன மக்கள் கடும் நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றனர்.

பாலஸ்தீனர்கள் உணவு, குடிதண்ணீர், மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசியமான பொருட்கள் எதுவுமின்றியும், மின்சாரம் இல்லாமலும் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

உணவு இல்லாததால் பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ள அந்த மக்களுக்கு தற்போது தரை வழியாகவும், வான் வழியாகவும் அளிக்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள்கள் போதுமான அளவில் இல்லை.

இதனாலேயே சைப்ரஸில் இருந்து ஐந்நூறு தொன் உதவிகள் திரட்டப்பட்டிருப்பதாகவும் அவைகளும் காசாவுக்கு அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மனித நேயமற்று தொடரும் பாலஸ்தீனம் மீதான போரில், பட்டினியை ஆயுதமாக இஸ்ரேல் பயன்படுத்துவதாக ஐநா குற்றம் சாட்டியுள்ளது. மேலும், இந்தப் போக்கை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

தொடரும் இஸ்ரேல்-ஹமாஸ் போரை நிறுத்துவது குறித்து பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியும்கூட இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, இதற்குத் தயாராக இல்லை. காசாவில் ஹமாஸ் படையை ஒழிக்கும் வரை போர் தொடரும் என்று அவர் எச்சரித்துள்ளார். இவரது கருத்துக்கு, அமெரிக்கா மற்றும் பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இஸ்ரேல் நாட்டு மக்களே இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மறுபுறம் ஐநா சபையில் போர் நிறுத்தம் குறித்து சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் தீர்மானத்தைக் கொண்டுவரும் போதெல்லாம்



அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிறுத்திவிடும். அது மட்டுமல்லாது இஸ்ரேலுக்கு தற்போதுவரை அமெரிக்கா ஆயுதங்களை விநியோகம் செய்து வருகிறது.

இதனால் சுமார் 32,000க்கும் அதிகமான பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

(9ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கின் கேடயத்தின் பயணத்தில் இணையும் இளைஞர்கள் சந்திப்பு





கிழக்கின் கேடயத்தின் நாவிதன்வெளி பிரதேசசபை பிரிவுக்கான இளைஞர்களை சந்திக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை நாவிதன்வெளி இளைஞர் இணைப்பாளர் முஹம்மட் அர்சாத் தலைமையில் இடம்பெற்றது. இதில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்துகொண்டு கிழக்கின் கேடயம் தலைவரும் முன்னாள் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் தலைவருமான எஸ்.எம். சபீஸ் அவர்களோடு இணைந்து கொண்டனர்.

யாரையும் விமர்சிக்காமல் புதிய அரசியல் கலாசாரத்தோடு சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்களாக இளைஞர்கள் புதுப்பரிநாமம் எடுக்கவேண்டும். அதற்கு தலையாய கடமையான கல்வியை எக்காரணம் கொண்டும் விட்டு விடக்கூடாது. என்றும் எல்லோரும் ஏதோ ஒரு துறையில் பட்டப்படிப்பை நிறைவு செய்துகொள்ள வேண்டும். அத்தோடு சமூக உணர்வுகளோடும் எமது சமூகம் முறையாக முன்னேறுவதற்கான அடித்தளத்தை அடையாளப்படுத்தி முன்னேறக்கூடியவர்களாகவும் மாறவேண்டும் எனத் தெரிவித்தார். இந்நிகழ்வில் தொழிலதிபர் ஏ.கே.அமீர், முகாமைத்துவ பணிப்பாளர் சபூர் ஆதம், தொழில் சங்க தலைவர் கபீர் கலீல், சமூக சேவகர் எச். வஹாம், ஆசிரியர்களான எம்.ஐ.எம். ராபி, இன்பாஸ் மற்றும் கிழக்கின் கேடயத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# உலகக் காசநோய் விழிப்புணர்வு சாய்ந்தமருதில் நடந்த ஊர்வலம்






(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

உலக காசநோய் தினம் மார்ச் மாதம் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இந்த ஆண்டு (2024) அனுஷ்டிக்கும் முகமாக சம்மாந்துறையில் அமைந்துள்ள கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள காச நோய் சம்பந்தமான விழிப்புணர்வு ஊர்வலம் சனிக்கிழமை சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில், காச நோய் சம்பந்தமாகவும், சமூகத்தில் காசநோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு செயற்பாடாகவே இவ்வூர்வலம் இடம்பெற்றது.

'காசநோயற்ற கல்முனைப் பிராந்தியத்தை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வானது

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசலின் முன்னால் ஆரம்பித்து பிரதான வீதி வழியாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் விதமாக வலம்வந்து சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலையில் முடிவடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது வைத்தியர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், தாதிமார்கள், சுகாதார ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சீன பல்கலைக்கழக பிரதிநிதிகள் கிழக்குப் பல்கலைக்கு வருகை

## ஒப்பந்தமும் கைச்சாத்து



(நூருல் ஹுதா உமர்)

சீனாவின் முன்னணி பல்கலைக்கழகமான யுனான் பல்கலைக்கழக பிரதிநிதிகள் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து கலாசார மற்றும் மொழி ரீதியான பரிமாற்றங்களை செய்வதற்கான நிலையம் ஸ்தாபிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வந்தாறுமூலையில் அமைந்துள்ள பல்கலைக்கழக மூதவை கட்டட தொகுதியில் இடம்பெற்றது.





யுனான் பல்கலைக்கழக உபபீடாதிபதி ஹு ஜின்மிங் தலைமையிலான குழுவினர் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், பிரதி உபவேந்தர், பதிவாளர் உட்பட சர்வதேச விவகாரங்கள் திணைக்கள இணைப்பாளர் ஆகியோருடன் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் குறித்த நிலையம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் உபவேந்தர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அத்துடன் சீன பல்கலைக்கழக பிரதிநிதிகளுக்கும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தருக்குமிடையிலான கூட்டம் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவக பணிப்பாளர், பீடாதிபதிகள், பதிவாளர், நூலகர், நிதியாளர் அத்துடன் சர்வதேச விவகாரங்கள் திணைக்கள இணைப்பாளர் ஆகியோரின் பங்கு பற்றலுடன் பல்கலைக்கழக சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, குறித்த நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகம் சார்பாக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கமும், யுனான் பல்கலைக்கழகம் சார்பாக அதன் உபபீடாதிபதி ஹு ஜின்மிங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இதன்போது, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் எண்ணக்கருவில் உருவாக்கப்பட்டு அவரது நெறிப்படுத்தலில் இப்பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட நிருவாக தலைமைத்துவ பயிற்சிநெறிகளை பூர்த்திசெய்த கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் சிதம்பரேசன் தலைமையில் நடைபெற்ற இச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் ஹு ஜின்மிங் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இதில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், விஜயத்தின் ஓர் அங்கமாக கன்ஸியூலர் அலகு நிலையத்திற்கான உத்தேச இடம் சீன பிரதிநிதிகளால் பார்வையிடப்பட்டது.

மேற்படி நிலையம் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகம் உட்பட உலகின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



## மைத்திரிபால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்பு பலவீனப் படுத்தப்பட்டது. தேசிய பாதுகாப்பின் பலவீனத்தை அடிப்படைவாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாரதூரமான கருத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை நடத்தியவர் யார் என்பதை தான் அறிவேன், நீதிமன்றம் அழைப்பு விடுத்தால் உண்மையை பகிரங்கப்படுத்த தயார் என்று மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். இவ்விடயத்தில் நீதிமன்றத்துக்கு செல்ல கூடாது பொலிஸ்க்கு செல்ல வேண்டும் என்று மைத்திரிபால சிறிசேனவுக்கு குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

பயங்கரவாதம், அரசுக்கு எதிராக செயற்பாடுகள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தும் அதனை உரிய தரப்புக்கு அறிவிக்காமல் மறைப்பது 10 ஆண்டுகால சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெகுவிரைவில் வெலிகடை சிறைக்கு செல்வார்.

69 இலட்ச மக்கள் பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் 2019 ஆம் ஆண்டு கோட்டபய ராஜபக்ச தலைமையிலான ஆட்சியை ஏற்படுத்தினார்கள். இலங்கை அரசியல் வரலாற்றில் கோட்டபய ராஜபக்சவைப் போன்று எவரும் மக்களாணையை காட்டிக் கொடுக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான மக்களாணையை ரணில் விக்கிரமசிங்கவிடமே ஒப்படைத்து விட்டு நாட்டை விட்டு தப்பியோடினார்

கோட்டபய ராஜபக்சவின் செயற்பாடு வெறுக்கத்தக்கது. சஜித் பிரேமதாச, அனுரகுமார திசாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் 69 இலட்ச மக்களாணையை பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. 69 இலட்ச மக்களாணையை நாங்களே தோற்றுவித்தோம், ஆகவே நாங்களே 69 இலட்ச மக்களாணைக்கு தலைமைத்துவம் வழங்குவோம் என்றார்.

## குறைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்வது சில அரசியல்வாதிகளின் நோக்கமாகும்.

எம்மைப்பொறுத்தவரையில் நாம் அனைவரினதும் அங்கீகாரத்துடன் அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளவே விரும்புகின்றோம். அதுமட்டுமன்றி எமது நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதே அதிகாரத்தி;ன் ஆரம்பம் என்று நாங்கள் நம்புகின்றோம்.

அதேநேரம் இனப்பிரச்சினை விடயத்தில் மாகாண சபைகள்தான் அவற்றுக்கான தீர்வு என்று நாம் கருதவில்லை. ஆனால் மாகாண சபைகள் அரசமைப்பில் காணப்படுகின்ற விடயமாகும்.

தமிழ் மக்கள் தமது விடயங்களைப்பூர்த்தி செய்வதற்கு மாகாண சபை முறைமை போதுமாக இருக்குமெனக் கருதுவார்களாக இருந்தால் அதில் உள்ள குறைபாடுகளை நீக்கி அம்முறையை நடைமுறைப்படுத்த முடியும்.

அதேநேரம், தீர்வு கிடைக்காது என்று கருதி அரசியல் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பார்களாக இருந்தால் அதனை உறுதிப்படுத்தவும் நாம் தயாராகவே உள்ளோம் என்றார்.

## ரணிலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு வன்னித் தேர்தல் தொகுதியில் 2000 பேருக்கு இலவச காப்புறுதித்திட்டம் வழங்கப்படவுள்ளது. அதன் முதல் கட்டமாக வவுனியாவைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்கள் 100 பேருக்கு காப்புறுதி வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கட்சியின் வன்னித் தேர்தல் தொகுதி அமைப்பாளர் ம.மயூரதன், கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 100




## மறுசீரமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி செய்து நவீன விவசாயத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.

பிங்கிரிய மற்றும் வடக்கில் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அதற்குத் தேவையான காணிகள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டங்கள் அடுத்த 05 வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

உங்கள் எதிர்காலத்திற்காகவே இதையெல்லாம் செய்கிறேன். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக என்றுதான் சொல்ல வேண்டும்.

மேலும், ஹிங்குரக்கொட பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்து வருவதோடு இந்த வருடம் ஹிங்குரக்கொட விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதன் மூலம்இந்தப்பிரதேசத்திற்குஉள்ளக விமான சேவைகள் கிடைக்கும்.

மேலும், பொலன்னறுவை வரலாற்று முக்கியமான நகரத்தை சுற்றுலாப்பயணிகளுக்காக இரவும் பகலும் திறந்துவிடலாம். நமது கலாச்சார அழகுகளையும் நவீன நடனங்கள்மற்றும்உள்ளூர்உணவு மற்றும்பானங்களுடன் இணைத்து சுற்றுலாத் திட்டங்களைத் தயாரிக்க முடியும். இந்தச் செயற்பாடுகள் அனைத்தையும்நாம்முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எனவேஇ நாடு எந்த வழியில் செல்லவேண்டும்என்பதைஇளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும். உங்கள் எதிர்காலத்தை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். உங்கள் எதிர்காலம் தொடர்பில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இளைஞர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அளித்த பதில்களும் பின்வருமாறு:

கேள்வி:

லங்காபுர கிராமசேவகர் பிரிவில் பெருமளவுவயல்நிலங்கள்உள்ளன. சில வயல்கள் வனஜீவராசிகள் திணைக்களத்திற்குசொந்தமானவை. அந்த வயல்களை மீண்டும் எமக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பதில்:

1985 வரைபடத்தின் பிரகாரம் வனவள திணைக்களத்திற்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன. மேலும், அந்த வரைபடத்தின்படி, கிராமங்களுக்கு சொந்தமான நிலங்களும் உள்ளன. எனவே இதுபற்றி ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைஎடுக்கஎதிர்பார்க்கிறோம்.

கேள்வி:

இளைஞர்களாகிய நாங்கள் உங்கள் மீது அபிமானம் உள்ளது. இந்தப் பிரதேசம் டொலர்களை சம்பாதிக்கக்கூடிய பகுதி. நம் கிராமங்களுக்கு வரும் காட்டு யானைகளைகாண்பித்துவெளிநாட்டவர்களிடம் டொலர்களை சம்பாதிக்கும் திறமை நம்மிடம் உள்ளது. அதற்காக எமக்கு பயிற்சிகளை வழங்கி நாட்டிற்கு டொலர்களை சம்பாதிப்பதோடு எமது வருமானம் ஈட்டும் திறன் குறித்தும் உங்களின் கவனத்திற்குக்கொண்டுவருகிறோம்.

பதில்:

நமது நாட்டில் சுற்றுலாத்துறை இன்று பெரும் முன்னேற்றம் கண்டு வருகிறது. மேலும் சுற்றுலாத்துறையை மேம்படுத்த குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்காலத்தில் இந்தக் கோரிக்கைக்கு உரிய தீர்வு வழங்கப்படும்என்பதைதெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி:

நாங்கள்வெலிகந்தபிரதேசத்தில் உள்ள தொலைதூர கிராமத்தில் வசிக்கிறோம். அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ்நவீனதொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைமேற்கொள்வதற்கு காணிகளை வழங்குமாறு பணிவுடன்கேட்டுக்கொள்கின்றோம்.

பதில்:

1977 களில் வெலிகந்த பிரதேசம் பெரும் காடாக இருந்தது. வெலிகந்த மற்றும் மாதுரு ஓயா இன்று விவசாயத்திற்கு சிறந்த பிரதேசங்களாகமாறியுள்ளன.விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் நவீன விவசாயத்தை கிராமத்திற்கு கொண்டு வரத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் நாம் ஆரம்பித்துள்ள 'உறுமய' திட்டத்தின் கீழ் மக்களுக்கு நிரந்தர காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். 20 இலட்சம் பேருக்கு சட்டப்பூர்வ காணி உரிமை கிடைக்கும் திட்டத்தை இரண்டு மாதங்களுக்குள்நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கிறோம். மேலும், இந்த பகுதியில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும்இ விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் பயிற்செய்கை மேற்கொள்வதை ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கிறோம்.

கேள்வி:

சுற்றுலாத்துறைக்கு திம்புலாகலைதனித்துவமானபிரதேசமாகும். இதுதொடர்பில்கவனம்செலுத்துமாறு பரிந்துரைக்கிறேன்.

பதில்:

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் மூலம் நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புதற்போது உருவாகியுள்ளது. இதன்படி, சுற்றுலாத்துறையைமேம்படுத்துவதில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன், இந்த நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. மேலும், சுற்றுலாத்துறையின் வருமானம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்துப் பிரசேதங்களையும் சுற்றுலாத்துறையைக் கவரக்கூடிய பகுதிகளாக அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம்கவனம்செலுத்தியுள்ளது

கேள்வி:

ஜனாதிபதி அவர்களே! நான் ஒரு சட்டக்கல்லூரி மாணவன். 1989 ஆம் ஆண்டு ஒரே நாளில் எனது குடும்பத்தைச் சேர்ந்த 06 பேரை ஜே.வி.பி கொன்று 08 மில்லியன் பெறுமதியான சொத்துக்களை சூறையாடியது. குடும்பத்தவர்களின் சடலங்களை கூட மயானத்திற்குக்கொண்டுசெல்லஅனுமதிக்கப்படவில்லை. ஜே.வி.பி. ஆவி இன்னும் இருப்பதாக நாங்கள் அச்சத்தில் இருக்கிறோம்.

கொல்லப்பட்ட குடும்பத்தின் உறுப்பினர்களில் ஒருவரான நான் அரசியல் பழிவாங்கல் காரணமாக ஹிங்குராங்கொடை உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான பிரதான வீதியில் உள்ள எனது கடையை கூட அரசியல் பலிவாங்கல் காரணமாக இழந்துள்ளேன். மூன்று தசாப்தங்களாக என்னைப் போன்ற பல இளைஞர்கள் இந்த அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகியிருப்பதோடு அதன் காரணமாக எங்களுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை. இது தொடர்பாக உங்களிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

பதில்:

அது தொடர்பில் கவனம் செலுத்த தயாராக உள்ளோம். உங்கள் கல்விச் செயற்பாடுகள் வெற்றியளிக்க வாழ்த்துகிறேன்' என்று ஜனாதிபதி பதிலளித்தார்.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் பிரதி அமைச்சர் சந்திரசிறி சூரியராச்சி, ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன மின்னேரியா தொகுதி அமைப்பாளர் ஜகத் சமரவிக்ரம, யுனைடட் யூத் ஆலோசனை சபையின்தலைவர்சுதத்சந்திரசேகர, அதன் பணிப்பாளர் நாயகம் பிரசாத் அசங்க ரத்நாயக்கஇ தேசிய அமைப்பாளர்விஜித்அநுராதமற்றும் பொலன்னறுவை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான இளைஞர் யுவதிகள் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக ஓரணியில் நின்று ஜனாதிபதி தேர்தலை சவாலுக்கு உட்படுத்தட்டும்

## ஜி.ரி.லிங்கநாதன் கோரிக்கை




சகல தமிழ்க் கட்சிகளும் ஓரணியிலே இருந்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை மிகப்பெரிய சவாலுக்கு உட்படுத்தவேண்டும். இதுவே மரணித்த அனைத்தியக்க போராளிகளுக்கும், பொது மக்களுக்கும் நாங்கள் செய்கின்ற ஆத்மார்த்தமான அஞ்சலியாக இருக்கும் என்று முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார். தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் முக்கியஸ்தர் வேலாயுதம் நல்லநாதர் (ஆர்ஆர்) அவர்களின் நினைவு நிகழ்வில் சனிக்கிழமை கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

அமரர் வேலாயுதம் நல்லநாதர் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் செயலாளராக இருந்த போது கட்சிகளை இணைப்பதிலே மிகப்பெரும் பங்காற்றியிருந்தார். அவரது நினைவாக இலவச குடிநீர்திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று அறிவிக்கப்படவுள்ள நிலையில் தென்னிலங்கையில் பல கட்சிகள் பிரிந்து நிற்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ்த் தரப்பானது இம்முறையும் சிங்கள பேரினவாத வேப்பாளர்களுக்கு வாக்களிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

அப்படி வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் எந்த வேப்பாளர் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எழுத்து மூலமான ஒப்புதலை தருகின்றார்களோ அந்த வேப்பாளர்கள் தொடர்பாகப் பரிசீலிக்க முடியும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து ஒவ்வொரு தேர்தல்களிலும், தமிழ்மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமல்ல தமிழ் தேசிய பரப்பிலே இருக்கின்ற சகல தமிழ் கட்சிகளும் ஓரணியிலே இருந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை மிகப்பெரிய சவாலுக்கு உட்படுத்தவேண்டும். இதுவே, நாங்கள் தமிழ் மக்களுக்கு செய்யப்படக்கூடிய உண்மையான கைம்மாறாகவும், மரணித்துப்போன அனைத்தியக்க போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் செய்கின்ற ஆத்மார்த்தமான அஞ்சலியாகவும் இருக்கும். - என்றார்.

(05-100)

# வவுனியாவில் காசநோயினால் கடந்த வருடம் மூவர் இறப்பு

## 58 பேர் பாதிப்பு

காசநோயால் வவுனியாவில் கடந்த வருடம் மூன்று பேர் இறந்துள்ளதுடன், 58 பேர் நோயாளர்களாக இனம்கணப்பட்டுள்ளனர் என வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார். வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவித்த போது -

இம்முறை 'ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்' எனும் தொனிப்பொருளில் உலக காசநோய் தினம் மார்ச் 24 ஆம் திகதி நினைவுகூரப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரை ஒரு லட்சம் பேரில் 62 பேர் காசநோயாளர்களாக இனம் காணப்படவேண்டும். இருப்பினும் 4 ஆயிரம் பேர் வரை இனம் காணப்படாமல் இருக்கின்றனர். நாட்டில் இறப்பிற்கு காரணமான மூன்றாவது நோயாக இது காணப்படுகின்றது.

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 58 நோயாளர்கள் இனம்காணப்பட்டனர். அதில் மூன்று பேர் உயிர் இழந்துள்ளனர். தொடர்ச்சியாக இரு வாரங்களிற்கு மேற்பட்ட இருமல், மாலை நேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறைவடைதல், சளியுடன் இரத்தம் வெளியேறல். இப்படியான அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்கலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள பொது வைத்தியசாலைகளுக்கு சென்று சாதாரண சளிப்பரிசோதனையை இலவசமாக செய்து கொள்வதன் மூலம் இந்த நோயை இனம் காணலாம்.

எந்தவித அறிகுறியும் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். குறிப்பாக ஏற்கனவே நோய் ஏற்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள், அல்லது நாட்பட்ட நோய் கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், சிறு நீரக நோயாளர்கள், மூட்டுவாதம் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படாமல் இந்த நோய் கிருமி தங்கக்கூடும். அப்படியானவர்களுக்கு பரிசோதனையைச் செய்வதன் மூலம் அதனைக் கண்டறியலாம்.

ஒருவருக்கு காசநோய் ஏற்பட்டால் ஆறு மாதத்திற்கு நேரடி கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளை பெற்றுக்கொண்டால் அதனை முற்றாகக் குணப்படுத்தலாம். அது தொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை. சிகிச்சைகளை எடுக்கத்தவறினால் அது தீவிரமடைந்து இறப்பிற்கு வழிவகுக்கும். - என்றார்.

(05 - 100)

# மருதமுனை பாடசாலை மேம்பாட்டு பேரவை திட்ட முன்னெடுப்புக்களின் மீளாய்வு கூட்டம்



(நூருல் ஹுதா உமர்)

மருதமுனையின் கல்வி மேம்பாடு மற்றும் ஒழுக்க சீராக்கம் ஆகிய விடயங்களை முன்னிறுத்தி 'மருதமுனை பாடசாலைகளின் மேம்பாட்டு பேரவை' முன்வைத்த விடயங்களின் மீளாய்வுக் கூட்டம் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் மருதமுனை அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. கல்முனை வலயக்கல்வி பணிமனை பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எச். எம். ஜாபிர், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப் பாளர்களான எம்.எச்.றியாஸா, பீ. ஜிஹானா ஆலிப் உள்ளிட்ட வலயக் கல்வி அலுவலக அதிகாரிகளுடன் மருதமுனையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

நோன்பு கால விடுமுறை வகுப்புக்கள் தொடர்பில் இங்கு கலந்தாலோசிக்கப்பட்டதுடன் பேரவையின் அங்குரார்ப்பண கூட்டத்தில் எடுக்கப்பட்ட முதலாவது தீர்மானமான 'நோன்பு 20 வரை உயர்தரம் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் பாடசாலை நேரசூசி வகுப்புகள் மதியம் 12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும்' என்ற விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேற்படி தீர்மானத்தில் 90 வீதத்துக்கும் அதிகமான வெற்றியை அடைந்திருப்பதாகவும் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக நலன் விரும்பிகளுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் கூட்டத்தின் தலைவர் வலயக் கல்விப்பணிப்பாளர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

12 மணிக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்பட்ட ஆசிரியர்களை அழைத்து கதைப்பெதனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கென குழுவொன்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

உயர்தரம் எழுதுகின்ற மாணவர்களின் குறுங்காலத்தைக் கருத்திற்கொண்டு, ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தில் மாற்றமில்லை எனவும் அது தொடர்பில் மாணவர்களின் இயலுமைக்கேற்ப ஆசிரியர்கள் தொழிற்பட வேண்டும் எனவும் மீள வலியுறுத்தப்பட்டது.

மாணவர்களின் நோன்புகால செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெடுப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்மானமொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

12 மணிக்கு முன்னர் வகுப்புக்களை நிறைவுறுத்த வேண்டும் என்பதில் பாடசாலை நேரசூசிகளை ஒரு நிலைப்படுத்துவதற்கான கலந்தாலோசனை முன்வைக்கப்பட்டு அதிபர்களின் ஏற்றுக் கொள்ளலுடன் கூட்டம் நிறைவுபெற்றது. (05)

# இலங்கை பிரதமர் தினேஸை சந்தித்த மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்

(நூருல் ஹுதா உமர்)


பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணனுக்கும் இடையிலான விசேட சந்திப பொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் சனிக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்றது. இந்த சந்திப்பில் இருநாடுக ளுக்குமிடையிலான நட்புறவை வலுப்படுத்துவது குறித்து இருவரும் கலந்துரையாடினர்.

அதேபோன்றுடட்டுக் சரவணன் மனிதவள அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இலங்கையர்கள் மலேசியாவில் பணிபுரிவதற்கான 10ஆயிரம் வேலைவாய்ப்பு வீசாவிற்கான ஒதுக்கீட்டுக்கு அனுமதியை வழங்கியுள்ளார். அதற்காக பிரதமர் நன்றிகளைத் தெரிவித்துள்ளதுடன், இந்த நடவடிக்கைக்கு தொடர் முயற்சிகளை மேற்கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தன பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

தற்போது இந்த ஒதுக்கீட்டினை இலங்கையை சேர்ந்த 1853 இளைஞர், யுவதிகள் பயன்பெறுகின்றனர்.

மேலும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன் கருத்து தெரிவிக்கையில் -

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார விழ்ச்சியில் இருந்து, இலங்கையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் சிறந்த நிர்வாகத்திறன் ஊடாக மிக விரைவாக இலங்கையை மீட்டெடுத்தனர். ஏனைய நாடுகள் இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் மீண்டெழகையாண்ட அணுகுமுறைக்கு பாராட்டுக்களை தெரிவித்தது. அத்துடன் இலங்கைக்கு எந்த நேரத்திலும் மலேசிய அரசாங்கம் உதவுவதற்கு காத்திருப்பதாகவும் டட்டுக் சரவணன் தெரிவித்தார்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# காசநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம்

## வவுனியாவில் நடந்தது







காசநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியாவில் நேற்று (ஞாயிற்றுக்கழமை) இடம்பெற்றது. வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தலைமையில் வைத்தியசாலை பின்வீதியில் அமைந்துள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு வளாகத்தில் 'ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டுவர முடியும்' எனும் தொனிப்பொருளில் உலக காச நோய் தினமான நேற்று (மார்ச் 24) விழிப்புணர்வு கருத்துரைகள் இடம்பெற்றன.

அதன் பின்னர், அங்கிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது. (05)

# இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் போட்டி





இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தின் ஒழுங்கு படுத்தலில் தேசிய இளைஞர் மித வேக மின்னல் வேக சதுரங்க போட்டிக்கு வடமாகாண யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்ட போட்டியாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டி கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

8,10,12,14 வயதுப்பிரிவினருக்கான போட்டி இடம்பெற்றது. குறித்த போட்டியில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச்சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட ஆண், பெண் போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி போட்டியில் வெற்றி பெறுவர்கள் நேரடியாக தேசிய மட்ட போட்டிக்கு செல்லவுள்ளனர். (05 - 113)

# நண்பனால் தாக்கப்பட்டவர் கம்பஹா பகுதியில் இறப்பு

கம்பஹா - அஸ்கிரிய பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என கம்பஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 33 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை என்பதுடன் தாக்கிய சந்தேக நபர் உயிரிழந்தவரின் நண்பர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தால் இவரது நண்பனால் கூரிய ஆயுதத்தில் தாக்கப்பட்டு இவர் உயிரிழந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது .

இதன்போது, கம்பஹா, பொக்குண பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# கர்ப்பப்பைவாய் புற்றுநோய்க்கான தடுப்பூசிகளுக்குப் பற்றாக்குறை

கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோயின் அபாயத்தைக் குறைக்க பெண்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் பற்றாக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது .

சுமார் 8 மாதங்களாக அந்த தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கடந்த வருடம் முதல் தடுப்பூசிப் பணிகள் முடங்கியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல மாதங்களாக இந்த நோய் தொடர்பான தடுப்பூசிகளுக்கு உலகளாவிய தட்டுப்பாடு நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்த தடுப்பூசிகளை எதிர்வரும் ஏப்ரல் மாத தொடக்கத்தில் இலங்கையில் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்தார் .

ஒன்றரை வருட காலத்திற்கு தேவையான தடுப்பூசிகள் இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது . (05)

# ஹப்புத்தளை பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

*ஹப்புதளையின் பிடபொல பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த்தாக நம்பப்படும் ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு உயிரிழந்த நபர் போவத்தை இதல்கஸ்ஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவராவார்.*

*சடலம் பிரேத பரிசோதனைக்காக தியத்தலாவ வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹப்புதளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(05)*

# ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் அதுருகிரிய பகுதியில் கைது

அதுருகிரிய பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதுருகிரிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரில் ஒருவரிடமிருந்து 7 கிராம் 100 மில்லி கிராம் ஹெரொயின் போதைப்பொருளும் மற்றவரிடமிருந்து 7 கிராம் 560 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கடுவலை மற்றும் ஹோமாகம பிரதேசங்களைச் சேர்ந்த 22 மற்றும் 41 வயதுடையவர்களாவர்.

இந்த சம்பவம் தொடர்பாக அதுருகிரிய பொலஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சுற்றுலாப் பயண வழிகாட்டி போதைப்பொருளுடன் கைது

## நானுஓயாவில் சிக்கினார்

வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வழிகாட்டி ஒருவர் போதைப்பொருள் வைத்திருந்த நிலையில் சனிக்கிழமை நானுஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நானுஓயா ரயில் நிலையத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணப் பொதியொன்றுடன் காணப்பட்ட இளைஞர் ஒருவரை பொலிஸார் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது அவரிடமிருந்து 1.030 மில்லிகிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 31 வயதுடைய சிலாபம் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணையின் பின்னர் சந்தேகநபரை நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் போதைப்பொருள் கிடைக்கும் வழிகள் மற்றும் அவரது விநியோக வலையமைப்பு குறித்து நானுஓயா பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# பட்டினியையும் ஆயுதமாக்கும் இஸ்ரேல்.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏவுகணைகளும், பீரங்கிக் குண்டுகளும் தாக்கி பலர் கொல்லப்பட்டாலும், போர் ஏற்படுத்தியுள்ள பசி, பட்டினியாலும் உயிரிழப்புகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.



**பட்டினியை ஆயுதமாக்கும் இஸ்ரேல்:**

தற்போது சர்வதேச நாடுகள் அனுப்பிய உணவு, மருந்து பொருட்கள் எகிப்தின் ராஃபா (சுயகய) எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில், போரில் பட்டினியை இஸ்ரேல் ஆயுதமாக பயன்படுத்துவதாக ஐநா குற்றம் சாட்டியுள்ளது. ஐ.நா மனித உரிமைகள் அலுவலக செய்தித் தொடர்பாளர் ஜெரமி இந்த குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னதாக எகிப்து, ஜோர்டான் மற்றும் இஸ்ரேலைச் சேர்ந்த சர்வதேச அகதிகள் (சுநகரபநநள ஐவெநசயெவழையெட) குழு காசாவில் ஏற்பட்டுள்ள பஞ்சம் குறித்து ஆய்வு செய்திருந்தது. இந்த ஆய்வு அறிக்கைப்படி, காசாவில் செயற்கையான பஞ்சம் ஏற்படுத்தப்படுவது உண்மை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

காசாவுக்குள் உதவி பொருட்கள் செல்வதை இஸ்ரேல் பகிரங்கமாக தடுத்து வருகிறது. கடந்த ஆறு மாதங்களாக நடைபெற்று வரும் போரில், காசா மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், சுத்தமான குடிதண்ணீர், மருந்துப் பொருட்கள் ஆகியவை கிடைப்பது சிரமமாகியுள்ளது என்று தகவல்கள் கூறுகின்றன.

இந்த மனித நேயமற்ற விவகாரம் குறித்து விசாரித்து வந்த சர்வதேச நீதிமன்றம், காசாவுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கிட இஸ்ரேல் குறுக்கே நிற்கக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தது. ஆனால், இந்த உத்தரவை இஸ்ரேல் வெளிப்படையாகக் கடைப்பிடிக்க மறுத்து விட்டது. உணவு மருந்துகளை ஏற்றி வரும் வாகனங்கள் நாட்கணக்கில் எல்லையில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனால் உணவுகள் வீணாக்கப்படுகின்றன. எனவே, உணவு கொண்டு வரும் டிரக்குகளின் எண்ணிக்கை பாதியாக குறைந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று கொடும் பஞ்சத்தின் விளிம்பில் பாலஸ்தீனத்தில் இருக்கும் காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்காக, சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து கப்பல் காசாவை நோக்கிச் சென்றுள்ளது.

**உணவு இன்றிய நோன்பு:**

காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்கான புதிய கடல் பாதை ஒன்றை ஏற்படுத்தும் முன்னோடித் திட்டமாக, சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து இருநூறு தொன் உணவு பொருட்களை ஏற்றிய கப்பல் ஒன்று மார்ச் 12 காசாவை நோக்கிப் புறப்பட்டது. காசாவின் வட மேற்காக 320 கிலோ மீற்றர் தொலைவிலேயே சைப்ரஸ் நாடு உள்ளது.

காசாவில் போர் நிறுத்த முயற்சிகளில் இழுபறி நீடிக்கும் நிலையில் இஸ்ரேலின் தாக்குதலுக்கு மத்தியிலேயே அங்குள்ள மக்கள் ரமழான் நோன்பை அனுஷ்டித்து வருகின்றனர். காசா மக்களில் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் தெற்கு நகரான ரபா வில் உள்ளவர்களும் இடம்பெயர்ந்து உள்ளனர். அங்கு வாழும் மக்கள் பொதியில் அடைக்கப்பட்ட உணவு மற்றும் அவரை விதைகளைக் கொண்டு நோன்பு துறந்ததாக கான்யூனிஸில் இருந்து அங்கு இடம்பெயர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு மகிழ்ச்சியான ரமழானாக இம்முறை உணரவில்லை. மக்கள் குளிருக்கு மத்தியில் கூடாரங்களில் இருக்கிறார்கள். இம்முறை ரமழான் குருதி வாடையுடன் துன்பம், பிரிவு மற்றும் ஒடுக்குமுறையைச் சுவைக்கிறோம் என்று கான் யூனிஸில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

**காசாவில் தற்காலிக துறைமுகம்:**

காசாவில் துறைமுகக் கட்டமைப்பு ஒன்று இல்லாதபோதும், அழிக்கப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகளை பயன்படுத்தி இறங்குதுறை ஒன்றை உருவாக்கவிருப்பதாக தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. தற்போது காசா கடலோரப் பகுதியில் தற்காலிக துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இப்போது காசா மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருட்களைச் சேகரித்த ஸ்பெயின் நாட்டின் “ஓப்பன் ஆர்ம்ஸ்' (ழிநெ யுசஅள) என்ற அமைப்புக்குச் சொந்தமான கப்பல் காசாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

'ஓபன் ஆர்ம்' என்ற ஸ்பெயின் தொண்டு நிறுவனத்தின் இந்தக் கப்பல் அரிசி, மாவு மற்றும் உணவு பொருட்களை ஏற்றி சைப்ரஸின் லர்னாகா துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்துள்ளது. 2005ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பாவிலிருந்து காசாவுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறையாகும். இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய அரபு இராச்சியமே அதிக நிதி உதவி அளித்திருப்பதோடு, ஸ்பெயின் தொண்டு நிறுவனம் கப்பலை வழங்கியுள்ளது.

காசாவில் குறிப்பாக வடக்கு காசாவுக்கான உதவிப் பொருட்கள் செல்வதை இஸ்ரேல் தொடர்ந்து தடுத்து வரும் சூழலில் அங்கு ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக மக்கள் உயிரிழந்து வருகின்றனர். காசாவில் பஞ்சம் ஏற்படுவது பற்றி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உதவி அமைப்புகள் எச்சரித்து வருகின்றன.

## சோளப் பயிர் செய்கைக்கான விதைகள் பதப்படுத்தும் நிலையம் வவுனியாவில்

### விவசாய அமைச்சரால் திறப்பு





சோளப் பயிற் செய்கைக்கான விதை பதப்படுத்தும் நிலையம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவால் வவுனியாவில் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வவுனியாவிற்கு விஜயம் செய்த விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, பூவரசன்குளம் பகுதியில் மேற்கொள்ளப்படும் நல்லின சோளப் பயிற்செய்கை நிலங்களைப் பார்வையிட்டதுடன், பயிற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, வவுனியா, நெளுக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட சோளப் பயிற்செய்கைக்கான விதை பதப்படுத்தும் மற்றும் விதை உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்ததுடன், அதன் செயற்பாடுகளையும் பார்வையிட்டதுடன், நிலையத்தில் விவசாயிகளுக்காக அமைக்கப்பட்ட வியாபார நிலையத்தையும் திறந்து வைத்து, வியாபார நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இதில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05 - 100)

## சதுரங்கத்தில் மாவட்ட வெற்றி கல்முனை ஸாஹிராவுக்கு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விளையாட்டு அமைச்சு மற்றும் விளையாட்டு திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான அம்பாறை மாவட்ட சதுரங்க போட்டி ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் சாய்ந்தமருது பிரதேச செயலகம் சார்பாக கலந்து கொண்ட கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி அணியினர் மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு கிழக்கு மாகாண மட்ட போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

(05)

## எருவில்பற்று பிரதேச செயலகத்தில் மகளிர் தின எல்லே விளையாட்டு

(அஸ்ஹர் இப்றாஹிம்)



மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினத்தின் எண்ணக்கரு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் வரிசையில் 'மகளிர் உத்தியோகத்தருக்கான எல்லே விளையாட்டு நிகழ்வு மகிழுர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களிடையே விளையாட்டு திறனை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர் சேவை உத்தியோகத்தர் த. சபியதாஷின் மேற்பார்வையில் பயிற்சியளிக்கப்பட்டு இறுதி போட்டி இடம்பெற்றது.

பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார் தலைமையிலான அணியினருக்கும், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வள்ளி வேணுகோபாலன் தலைமையிலான அணியினருக்கும் இடையில் இடம்பெற்ற போட்டி தலா 3 ஓட்டப் பெறுதிகளுடன் சமநிலையில் நிறைவுபெற்றது. இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் உட்பட பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

## வவுனியா – புதிய சாளம்பைக்குளத்தில் சிறப்பாக இடம்பெற்ற இப்தார் நிகழ்வு





வவுனியா, புதிய சாளம்பைக்குளம், மஸ்ஜிதுல் அக்ஸா ஜீம்மா பள்ளியில் இப்தார் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட ஜம்மியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் என்.பி.ஜீனைத் மதனி அவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

நோன்பு இருந்த அக் கிராம மக்கள் சனிக்கிழமை மாலை 6.25 மணிக்கு மஸ்ஜிதுல் அக்ஸா ஜீம்மா பள்ளிக்கு வருகை தந்து இப்தார் நிகழ்வில் பங்குபற்றியதுடன், தொழுகையிலும் ஈடுபட்டனர். இதில் வவுனியா பல்கலைக்கழக இஸ்லாமிய மாணவர்கள், புதிய சாளம்பைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

(05 - 100)

## புளொட் முக்கியஸ்தர் 'ஆர் ஆர்' நினைவாக இலவச குடிதண்ணீர் திட்டம் தொடக்கம்

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) முக்கியஸ்தர் வேலாயுதம் நல்லநாதர் (ஆர்.ஆர்) நினைவாக இலவச குடிநீர்திட்டம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா, கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் குறித்த இலவச குடிநீர்த்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தாகசாந்தி நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், க.சிவனேசன், வவுனியா நகரசபையின் முன்னாள் உபநகர பிதா சந்திரகுலசிங்கம் மற்றும் கழகத்தின் முக்கிஸ்தர்கள், அன்னாரது உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05 - 100)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2024இல் வெளியிடப்பெற்றது